# ஈஸ்டர் வெடிகுண்டுத் தாக்குதலும் அதன் விளைவுகளும் குறித்த ஓர் பகுப்பாய்வு

## An Analysis of the Easter Bombings and its Consequences

AW. Fathima Benazir
Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka
awfnusla@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** உலக அரசுகளில் இன்று பிரதானமான ஓர் பேசுபொருளாக வன்முறை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்கள் போன்றன காணப்பட்டன. தெற்காசிய நாடுகளுல் இலங்கையானது பல்லின சமூகக் கட்டமைப்பைக் கொண்ட ஓர் தீவாகும். இலங்கை பெரும்பான்மை சிங்கள மக்களையும் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களையும் கொண்டமைந்த ஓர் நாடாகும். இந்நாட்டில் இனங்களுக்கிடையிலான மோதல் என்பது நீண்ட கால வரலாற்றை கொண்டமைந்துள்ளது. 2009 ஆண்டு இலங்கை அரசானது ஓர் பாரிய மோதலை எதிர் கொண்டதுடன் சர்வதேச சமூகங்களுக்கு மத்தியில் விமர்சனங்களுக்கும் ஆளானது. இதனை அடுத்து நீண்ட காலத்தின் பின்னரான ஓர் பயங்கரவாதத் தாக்குதலாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காணப்படுகின்றது. இத் தாக்குதலானது 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் கிழக்கில் முக்கிய நகரமாக விளங்கும் மட்டக்களப்பிலும் மிகவும் ஒருங்கிணைந்த அடிப்படையிலும் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான காரணம் தொடர்பில் பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன. இலங்கை முஸ்லிம்களின் அரபுமயமாக்கலை இத்தாக்குதலுக்கான காரணமாக அடையாளப்படுத்தியுள்ளனர். தாக்குதல்களுடன் முஸ்லிம்களில் சிறுபகுதியினர் தொடர்புபட்டிருப்பதன் காரணமாக தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஆகவே தான் இத்தாக்குதலின் பின்னனி என்ன என்பதனையும் இத்தாக்குதலின் விளைவு யாது என்பதையும் கண்டறிவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு இடம் பெற்றுள்ளதுடன் ஆய்வுத் தகவல்கள் 2ஆம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளதுடன் இவ்வாய்வின் கண்டு பிடிப்புகளாக ஈஸ்டர் தாக்குதலையும் அவற்றின் விளைவுகளையும் இதனால் சிறுபான்மை முஸ்லிம் சமூகம் முகம்கொடுக்க வேண்டிய சவால்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

**பிரதான சொற்கள்:** உயிர்த்த ஞாயிறு, பயங்கரவாதம், தௌஹீத் ஜமாஅத், இஸ்லாமோபியா

### அறிமுகம்

இலங்கை அரசானது ஓர் பல்லின சமூக அமைப்பைக் கொண்டதாகும். இங்கு பெரும்பான்மையினராக பௌத்தர்கள் 70.2 சதவீதம் வாழ்கின்றனர். சிறுபான்மையினராக இந்துக்கள் 12.6 வீதமும் முஸ்லிம்கள் 9.7 சதவீதமும் கிறிஸ்த்தவர்கள் 7.4 வீதமும் வாழ்ந்து வருகின்றனர் (Census of population and housing, 2012). இலங்கையின் இரண்டாம் நிலை சிறுபான்மையினமாகக் காணப்படும் முஸ்லிம்களின் பூர்வீகம் பற்றி, அறிய முனையும் போது

கி.பி. 8 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே அரேபிய முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்துவிட்டதாகத் தெரியவருகின்றது. தவிர அரேபியாவில் இஸ்லாத்தின் தோற்ற காலப்பகுதியிலேயே இலங்கைக்கு முஸ்லிம்கள் வந்துவிட்டதற்கான போதியளவான ஆதாரங்களும் உள்ளன.

இலங்கை பிரித்தானியர்களின் காலனித்துவத்திற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் படிப்படியாக சிறுபான்மை மதத்தினருக்கெதிரான நெருக்கடிகள் ஆரம்பமானது. வரலாற்று ரீதியாக இலங்கையில் பயங்கரவாதம் 1983 இல் தொடங்கி உள்நாட்டுப்போரின் போது அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எதிராக தமிழில் விடுதலைப்புலிகள் ஒருங்கினைந்த தாக்குதலில் ஈடுபட்டது. இம்முயற்சியில் LTTE 2009ல் தோற்கடிக்கப்பட்டது. அவ்வாறே நீண்ட காலமாக தமிழ் முஸ்லிம் மக்கள் இலங்கையில் நல்லுறவுடன் வாழ்ந்து வந்துள்ளனர். எனினும் 1980களில் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்ததனால் தமிழ் ஆயுத இயக்கங்களின் எதிரி மனோபாவம் முஸ்லிம்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழ் முஸ்லிம் மக்கள் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் நோக்கும் நிலை ஏற்பட்டது. இக்கட்டத்திலேயே முஸ்லிம் ஊர்காவல் படை வீரர்களும் சிவில் சேவையாளர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் போராளிக் குழுக்களினால் கொல்லப்பட்டனர். முஸ்லிம் எல்லைப்புற கிராமங்கள் தமிழ் புலிகளின் நெருக்கடிகளுக்கு உட்பட்டதுடன் பலர் இடம்பெயரவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இச் சந்தர்பத்திலேயே முஸ்லிம் சிறுபான்மை சமூகமானது பெரும்பான்மை சமூகத்திலிருந்தும் சிறுபான்மை தமிழ் சமூகத்திலிருந்தும் அரசிலிருந்தும் வெளித்தள்ளப்பட்டது எனலாம். இத் தருணத்தில் முஸ்லிம்களின் சமூக அரசியல் பிரச்சினைகளை முன்கொண்டு செல்லத்தக்க உறுதியான முஸ்லிம் தலைமைக்கான வெற்றிடம் ஒன்று முஸ்லிம்களால் உணரப்பட்டது. முஸ்லிம் தேச மக்களின் நலன்கள் குறித்து முஸ்லிம்கள் விழிப்படையலாயினர். இவற்றின் ஓர் புதுவரவே எம். எச். எம். அஷ்ரப் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸூம் ஆகும்.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் யுத்த வெற்றியானது பல பௌத்த தேசியவாத குழுக்கள் தோன்ற வழிவிட்டது எனலாம். பௌத்தம் உலகின் மிக அதிகமாக சமாதானத்தை போதிக்கும் மார்க்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இருந்த போதிலும் வரலாற்றில் அது வன்முறை பக்கங்களை கொண்டதாகவே காணப்பட்டு வந்துள்ளது (votta, 2007). குறிப்பாக பொதுபலசேனா, சிங்களே, சிங்கள ராவய, ராவனபலய போன்ற தேசியவாத குழுக்கள் தோற்றம் பெற்றன (Fowsar, 2014). இவர்கள் முஸ்லிம்களின் ஒற்றுமையை உடைக்க பல பிரசாரங்களையும் தாக்குதல்களையும் நடாத்தினர். இப்பிரச்சாரம் சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பரவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. குறிப்பாக பௌத்த மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விடுவதற்காக தேசியவாத அமைப்புக்கள் கையாண்ட பிரதான உத்தியே அந்தந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள், குழுக்களை தூண்டிவிட்டு போராட தொடங்கியமையாகும். இவற்றின் விளைவே முஸ்லிம்கள் ஹலால் சான்றிதல் பிரச்சினை, மாடு அறுத்தல் பிரச்சினை, வணக்க வழிபாடுகளில் தடையினை ஏற்படுத்துதல், வணக்கஸ்தளங்களை உடைத்தல், பொருளாதாரத்தில் தடைவிதித்தல், சில இடங்களில் அத்துமீறி நுழைந்து இது


ISBN 978-624-5736-14-0

பௌத்தர்களின் புனித நிலம் என அறிவித்தல், பெண்கள் ஹிஜாப் அணிதல் தடைசெய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தல், இவற்றிற்கு மேலாக முஸ்லிம்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும் என்று ஊடகங்கள் மற்றும் பேரணிகள் மூலமாகவும் அறிவித்தனர். இவ்வாறு பௌத்த தேசியவாதத் தோற்றமானது முஸ்லிம்கள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

இது முஸ்லிம் சமூகங்கள் மீது பல்வேறு வன்முறை தாக்குதல்கள் நடாத்தப்படுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. அந்தவகையில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அலுத்கம, திகன, அம்பாறை சம்பவங்கள் பிரதானமானவையாகும். இத்தாக்குதல்களைத் தொடர்ந்தே 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்கள் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் பிரபல நட்சத்திர ஹோட்டல்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டன. இதன்மூலம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் சூழ்நிலையின் கைதிகளாக மாறினர். தாக்குதல்களுக்குள்ளான கிறிஸ்தவ சமூகம் அமைதி காத்திருந்த போதிலும் இந்த சந்தர்ப்பத்தை சிங்கள-பௌத்த தீவிரவாத போக்குடைய குழுக்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி, முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளை முன்னெடுக்க வந்தனர். இதனால் ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் சமூகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். அந்நெருக்கடிகளை ஆராய்வதற்கு முன்னர் இக்கட்டுரையானது ஈஸ்டர் தினதாக்குதல்கள், அதற்கான பின்னணி, தாக்குதல்களுக்காக கிறிஸ்தவ தேவாலயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கான காரணிகள் என்பன தொடர்பில் பின்வருமாறு ஆராய்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை அரசானது 2009ம் ஆண்டு எதிர் கொண்ட பாரிய யுத்தத்தினைத் தொடர்ந்து எதிர்பார்க்கா வகையில் அடுத்த ஓர் பயங்கரவாதத் தாக்குதலினை எதிர் கொண்டுள்ளது. இலங்கை அரசின் யுத்த வெற்றியினைத் தொடர்ந்து சிறுபான்மை சமூகத்திற்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினருக்கெதிரான வன்முறைகள் அரச ஆதரவுடன் இடம்பெற்று வருவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் கிழக்கில் முக்கிய நகரமாக விளங்கும் மட்டக்களப்பிலும் மிகவும் ஒருங்கிணைந்த அடிப்படையிலும் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான காரணம் தொடர்பில் பல்வேறு கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன. இலங்கை முஸ்லிம்களின் அரபுமயமாக்கலை இத்தாக்குதலுக்கான காரணமாக அடையாளப்படுத்தியுள்ளனர். ஆகவே தான இவ் ஆய்வானது 21.04.2019 அன்று இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலையும் அதன் விளைவுகளையும் ஆய்வு பிரச்சினையாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது பின்வரும் ஆய்வு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இடம் பெற்றுள்ளது.

- ஈஸ்டர் தின தாக்குதல் என்றால் என்ன என்பதனையும் அதன் பின்னணியினையும் தெளிவுபடுத்தல்.
- ஈஸ்டர் தின தாக்குதலுக்குப் பின்னரான நிலையினை அறிதல்.
- ஈஸ்டர் தாக்குதலின் விளைவு தொடர்பாக வெளிக்கொணர்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது பண்பு ரீதியான விமர்சனப் பகுப்பாய்வாகும். இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், அரசாங்க ஆவணங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உற்படுத்தப்பட்டன.

**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**ஈஸ்டர் தின தாக்குதல் பின்னனி**

இலங்கையில் உள்நாட்டு பயங்கரவாதத் தாக்குதல் முடிவுற்றதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மிகப் பெரிய பயங்கரவாதத் தாக்குதல் ஈஸ்டர் தின தாக்குதலாகும். இத்தாக்குதல்கள் யாரும் எதிர்பாராத விதமாக 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.45க்கும் 9.05க்கும் இடைப்பட்ட நேரத்திலும் மதியம் 1.05 மற்றும் 2.25 மணியளவிலும் இலங்கையின் கொழும்பு மற்றும் ஏனைய கரையோரப் பகுதிகளிலுள்ள மூன்று தேவாலயங்கள், நான்கு நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் தெமட்டகொட வீட்டுத்தோட்டம் என்பவற்றிலும் நடாத்தப்பட்டன. இதில் 45 வெளிநாட்டவர் உள்ளடங்கலாக 259பேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் (The times of India, 2019).

முதலாவது தாக்குதல் ஏப்ரல் 21 ஆம் திகதி காலை 8.45 மணியளவில் கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள கொச்சிக்கடை எனும் இடத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க உயர்மறை மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற திருத்தலமாகவும் கிறிஸ்தவ கோயிலாகவும் விளங்கும் புனித அந்தோனியர் திருத்தலம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் 50 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். காலை 8:47 மணியளவில் தேவாலயங்கள் மீதான இரண்டாவது தாக்குதல் இலங்கை பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்த்தி விமான நிலையம் அமையப்பெற்றுள்ள நீர்கொழும்பு கட்டுவாப்பிடிய பகுதியில் உள்ள புனித செபஸ்டியன் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் சுமார் 93 பேர் உயிரிழந்தனர். அதனைத்தொடர்ந்து காலை 9.05 மணியளவில் மூன்றாவது தாக்குதல் நடாத்தப்பட்டது. இது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஒரு பறைசாற்றுக் கிறிஸ்தவ கோவில் மீது மேற்கொள்ளப்பட்டது. இங்கு இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் குறைந்தது 28 பேர் கொல்லப்பட்டதாகவும் இறந்தவர்களில் பெரும்பாலானோர் ஞாயிறு பாடசாலையில் பயின்று வந்த சிறுவர்கள் எனவும் கூறப்படுகின்றது.


ISBN 978-624-5736-14-0

இவ்வாறு இலங்கையில் உள்ள 3 புனித தேவாலயங்களில் மாத்திரமன்றி பிரபல்யமான 4 நட்சத்திர உணவகங்கள் மீதும் அதே தினத்தில் குறித்த தரப்பினரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி கொழும்பு தலைநகரில் அமைந்துள்ள 04 நட்சத்திர உணவகங்களான ஸங்ரில்லா, த ரொபிகல், கிங்ஸ்பெரி, சினமன்ட் கிரான்ட் ஆகியன பிரபல்யம் வாய்ந்த சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரக்கூடிய உணவு விடுதிகளாகும். இங்கு மொத்தமாக 80 க்கும் அதிகமானோர் 04 நட்சத்திர உணகங்களிலும் உயிரிழந்துள்ளனர். அத்தோடு கொழும்பின் பல பகுதிகளிலும் காவல்துறையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது தெமட்டகொட வீடொன்றில் குண்டுகள் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது குண்டுகள் வெடித்ததில் மூன்று காவல்துறை அதிகாரிகள் கொல்லப்பட்டனர். மேலும் தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலைதாரிகள் தம்மை இராணுவத்தினரால் அடையாளம் காணப்பட்ட போது குண்டுகளை வெடிக்கச் செய்த சம்பவம் பதிவாகியுள்ளது. இதனடிப்படையில் ஏப்ரல் 21இல் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களில் மொத்தமாக 277 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

தாக்குதல்களை தொடர்ந்து இலங்கை புலனாய்வுப் பிரிவினர் அது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அதற்கான சூத்திரதாரிகளையும் அடையாளங்கண்டனர். அதன்படி தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பைச் சேர்ந்த மொஹமட் சஹ்ரான் (Mohammed Zahran) அல்லது சஹ்ரான் ஹாசிமி (Zahran Hashmi) என்பவரின் தலைமையில் குறித்த தாக்குதல்கள் நடாத்தப்பட்டதாக இலங்கை அதிகாரிகள் கண்டறிந்தனர். மொஹமட் சஹ்ரான் என்பவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தீவிர உரைகள் நிகழ்த்தி வருவதாக முஸ்லிம் தலைவர்களினால் அறியப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் இணைந்து தாக்குதல்களில் ஈடுபட்ட ஏனைய எட்டு குண்டுதாரிகளும் கூட இலங்கை முஸ்லிம்கள் எனவும் இவர்கள் அனைவரும் திட்டமிட்ட அடிப்படைகளில் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர் எனவும் விசாரணைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவர்களில் தேசிய தௌஹீத் ஜமாஅத் தலைவரான 34 வயதுடைய மொஹமட் சஹ்ரான் என்பவர் இலங்கையின் வணிக வியாபாரியின் மகனான 31 வயதுடைய இல்ஹாம் இப்றாஹிம் (Ilham Ibrahim) என்பவருடன் இணைந்து சங்கரில்லா ஹோட்டலில் தாக்குதல் நடாத்தினார் எனவும் இல்ஹாமின் மூத்த சகோதரரான இன்சாப் இப்றாஹிம் (Inshaf Ibrahim) சினமன் கிரேன்ட் ஹோட்டலில் குண்டை வெடிக்கச் செய்தார் எனவும் அறியப்பட்டது. மேலும் மொஹமட் அசாம் மொஹமட் முபாரக் (Mohamed Azaam Mohamed Mubarak) கொழும்பு கிங்ஸ்பெரி நட்சத்திர விடுதியிலும் அச்சி முகம்மது மொஹமட் ஹஸ்துன் (Achchi Muhammadu Mohamed Hasthun) என்பவர் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியன் தேவாலயத்திலும் மொஹமட் நாசர் மொஹமட் ஆசாத் (Mohamad Nazar Mohamed Aazath) மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திலும் அலாவுதீன் அஹமட் முவாத் (Alwudeen Ahamed Muaath) கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியர் தேவாலயத்திலும் குண்டை வெடிக்கச் செய்தனர் என


ISBN 978-624-5736-14-0

உறுதிப்படுத்தப்பட்டது (Amarasingham, 2019). முதற்கட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து சுமார் 5 மணி நேரத்திற்குப் பின்னர் மதியம் 1.05 மணியளவில் அப்துல் லதீப் ஜமீல் மொஹமட் (Abdul Lathief Jameel Mohamed) என்பவர் தெஹிவளை ட்ரொபிகல் ஹோட்டலில் மற்றுமொரு குண்டை வெடிக்கச் செய்தார். அதனையடுத்து 2.25 மணியளவில் தெமட்டகொட வீடொன்றிலும் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இலங்கை காவல்துறையின் கூற்றுப்படி தெமட்டகொட தாக்குதல் இன்சாப் இப்றாஹிமின் மனைவியான பாத்திமா இப்றாஹிமால் நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதலில் 3 STF அலுவலர்களும் பாத்திமா இப்றாஹிமின் 3 குழந்தைகளும் காவு கொள்ளப்பட்டனர் (Amarasingham, 2019).

**தாக்குதலின் பின்னரான நிலை**

தாக்குதலினைத் தொடர்ந்து நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்புக்காக வேண்டி அனைத்தையும் அரசாங்கம் மூடியது. பாதுகாப்பு அமைச்சகம் ஒரு பொலிஸ் ஊரடங்கு உத்தரவை தாக்குதல் இடம் பெற்ற நாளில் 6.00 மணியளவில் ஆரம்பித்தது. தற்காலிகமாக சமூக ஊடகங்களில் தடையை விதித்தது. மேலும் தாக்குதல் இடம் பெற்ற நாளினை பின்தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு பாடசாலை விடுமுறையை கல்வி அமைச்சர், அகில விராஜ் காரிய வசம் அவர்கள் வகுத்தார். அவ்வாறே மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனம் கொழும்பில் உள்ள பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அருகே கண்டு பிடிக்கப்பட்டதுடன் அது இலங்கை விமானப்படையால் நீக்கப்பட்டது.

ஏப்ரல் 22ம் திகதி THE SPECIAL TASK FORCE (STF) பிரிவினர் முந்தய நாள் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களில் ஒன்றான St Antonys Shrine ஆலயத்திற்கு அருகில் தாக்குதல் நடாத்தியவர்களுக்கு சொந்தமான வேனை கண்டுபிடித்தனர். அதனை சோதனை செய்த போது 3 Bombs காணப்பட்டதுடன் அதனை சுற்றியுள்ள பகுதியிலுள்ள அனைவரையும் வெடிகுண்டு தடுப்பு பிரிவினர் வெளியேற்றினர்.

அதே நாளில் Bastianmawatha யின் Paraphernalயை எனும் தனியார் பேருந்து நிலையத்தில் 87 குண்டுப் பொருட்களை பொலிசார் கண்டுபிடித்ததாக கூறப்படுகிறது. ஏப்ரல் 25ம் திகதி the Criminal Investigation Department (CID) இத் தாக்குதலுடன் தொடர்புடைய 6 பேரினுடைய புகைப்படத்தினை வெளியாக்கினர். 28 ஏப்ரலில் Mohamed Iwuhaim Saadiq Abdul Haq, Mohamed Iwuhaim Shahid Abdul Haq என்ற இருவரை நாவலப்பிட்டியாவில் வைத்து பொலிசார் கைது செய்து அவர்களை CID யிடம் ஒப்படைத்தனர்,

2019-04-26 ஆம் திகதி கல்முனை Shoot Outனைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் சாய்ந்தமருதில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்ட போது அங்கு 03 தற்கொலை குண்டுதாரிகள் தங்களை வெடிக்கச் செய்ததுடன் துப்பாக்கிச் சூடுகளும் இடம் பெற்றன. இதில் 09 குடும்ப உறுப்பினர்களும் 03 குழந்தைகள் உட்பட 03 பயங்கரவாதிகளும் படையினரால் சுட்டுக்கொள்ளப்பட்டனர். இதில் பொது மக்களில் ஒருவரும் இடையில் சிக்கி உயிரிழந்தார். அதே வேளை இத்தாக்குதலில் காயமடைந்த ஒரு பெண்ணும் குழந்தையும்

மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் சஹ்ரானின் மனைவியும் குழந்தையும் ஆகும்.

அடுத்த தேடுதல் நடவடிக்கை சம்மாந்துறையை அடியாகக் கொண்டு இடம் பெற்றது. 150க்கு மேற்பட்ட Gelignite Sticksகள், நீருடைகள் மற்றும் கொடிகள், 100000 Metal Balls, வேன் மற்றும் Lap Top ஆகியன ஒரு வீட்டிற்குள் கண்டு எடுத்தனர். மேலும் கல்முனை, சவலக்கட சம்மாந்துறை ஆகிய பொலிஸ் பகுதிகளில் கால வரையற்ற ஊரடங்கு உத்தரவும் விதிக்கப்பட்டது.

**ஈஸ்டர் தாக்குதலின் விளைவுகள்**

யுத்தத்திற்கு பிந்திய இலங்கையின் முக்கிய போக்குகளில் ஒன்றாக இஸ்லாமோபோபியா (Islamophobia) அடையாளப்படுத்தப்படுகின்றது. அரசியல் ரீதியான ஆதாயம் தேடுகின்றவர்கள் வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காகவும் அவர்களின் வாக்குகளை ஒன்றுதிரட்டுவதற்காகவும் சிறுபான்மை எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். இது வன்முறைக்குழுக்களின் உருவாக்கத்திற்கும் அவர்கள் சிறுபான்மை சமூகங்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிடவும் காரணமாக அமைகின்றது. இதனையே இலங்கையின் கடந்த கால அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்த அடிப்படையிலேதான் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தினத் தாக்குதலானது பாரிய அரசியல் சமூக பொருளாதார ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது எனலாம் ஆகவேதான் ஈஸ்டர் தின தாக்குதலின் விளைவுகளை பின்வருமாறு நோக்க முடியும்.

**அரசியல் விளைவுகள்**

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களானது அரசியல் ரீதியிலாக ஏற்படுத்திய தாக்கங்கள் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்து விடும் அளவுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையிலேதான் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் Rishad Bathiudeen, மாகாண ஆளுனர் அசாத் சாலி மற்றும் M.L.A.M. Hizbullah போன்றோரை ராஜினாமா செய்யக் கோரி அத்ருவியே ரத்னா தேரர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து இவர்கள் ஜீன் 3ம் திகதி ஜனாதிபதி சிறிசேனாவிடம் இராஜினாமா செய்தனர் (www. Dailymirror. lk).

இதனைத் தொடர்ந்து அதே நாளில் இலங்கை முஸ்லிம் காங்ரஸின் தலைவர் ரவூப் ஹக்கிமின் அறிவிப்பை அடுத்து அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ராஜினாமா செய்தனர். அதில் அமைச்சரவை அமைச்சர் கபீர் ஹாஷிம், ரவூப் ஹக்கிம், ர்.ஆ.ஆ.ஹரீஸ், அமீர் அலி ஷிஹாப்தீன், சையத் அலி ஜாஹிர், அப்துல்லாஹ் மஹ்ருப் போன்றோர் உள்ளடங்குவர். ஜீன் 4ம் திகதி யு.து.ஆ முஸம்மில் மேற்கு மாகாண ஆளுனராக நியமிக்கப்பட்டார்.

கடந்த காலங்களில் அரசாங்கங்களை அமைப்பதில் சிறுபான்மை கட்சிகள் தங்களது பங்களிப்புக்களை வழங்கி வந்தன. இதன்மூலம் சிறுபான்மை சமூகம் தைரியமாக குரல்கொடுத்து பேசமுடியுமாக இருந்தது. தற்போது சிறுபான்மை கட்சிகளின் ஆதரவின்றி,

பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஆட்சியமைக்கும் நோக்கில் தேர்தல் முறைமையை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் இனவாத ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் சமூகமும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் இலக்குவைக்கப்பட்டு இனவாத ரீதியாக நெருக்குவாரங்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. அந்த பின்னணியில் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஒரு முஸ்லிம் அமைச்சர்கள் கூட இல்லை. சமூகம் சார்ந்த விடயங்கள் அமைச்சரவைக்கு வரும்போது அது தொடர்பில் பேசுவதற்கு யாருமே இல்லாமல் முஸ்லிம் சமூகம் ஓரங்கப்பட்டப்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் தங்களுக்கு எதிராக செயற்பட்ட காரணத்தினால் அதிகளவான முஸ்லிம் வாக்குகள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்பதோடு அவர்கள் மீதான தீவிரவாத சாயம் பூசிய பேச்சுக்களை பெரும்பான்மை மக்கள் மத்தியில் முன்வைத்ததன் காரணமாக பெரும்பான்மை வாக்குகளை மாத்திரம் வைத்து ஆட்சியை கைப்பற்ற முடிந்தது. குண்டு வெடிப்பை தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் புஜித் ஜெயசுந்தரா கடும் விமர்சனத்திற்கு உள்ளானார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி இன்னொரு குண்டு வெடிப்பை தடுக்க இவர் இராஜினாமா செய்ய வேண்டும் என கூறியது.

முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ பாராளுமன்றில் ஆற்றிய உரையில் உளவுத்துறையை பலவீனப்படுத்தியதற்காக அரசாங்கத்தை அவதூறாகப் பேசினார். 2015ம் ஆண்டு நாட்டை பாதுகாக்கவும் அமைதியாகவும் ஒப்படைத்ததாகக் கோரினார். 2019 ஈஸ்டர் தாக்குதலுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு எனக் கூறியதுடன் இப்பயங்கரவாதத் தாக்குதல் தனது ஆட்சியின் கீழ் ஒரு போதும் இடம் பெற்றிருக்கமாட்டாது என்றார் (www.dailymirror.lk).

25 ஏப்ரல் அன்று பொலிஸ்மா அதிபர் புஜித் ஜெயசுந்தரா பதவி விலகுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்கள் அறிவித்த போதும் இது குறித்து ஜெய சுந்தர அவர்கள் எதுவித கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. ஜனாதிபதியிடம் ராஜினாமா கோரிக்கைக்கு எந்த பதிலும் கிடைக்காததால் ஏப்ரல் 29 அன்று IGP ஐ கட்டாய விடுப்பில் அனுப்பினர். இவர் அரசியலமைப்பு கவுன்சிலின் சிபாரிசின் மூலம் நியமிக்கப்பட்டதால் இவரை பதவி நீக்குவதாயின் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு பிரேரனையால் மட்டுமே நீக்க முடியும் என மைத்திரிபால சிறிசேனா அவர்கள் கூறினார்கள் (www.dailymirror.ik). அதே நாளில் D. Wickamaratne Acting IGP ஆக நியமிக்கப்பட்டார். அவ்வாறே Shantha Kotte Goda பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அதே போன்று இந்த தாக்குதல்களுக்கும் இழப்புக்களுக்கும் நெருக்கடி நிலைமைகளுக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்ற குற்றச்சாட்டை முன் வைத்து அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி நம்பிக்கையில்லா பிரேரனையை சமர்ப்பித்தது. அந்த கட்டத்தில் எந்த நம்பிக்கையில்லா பிரேரனையை விவாதத்துக்கு எடுப்பது என்ற பிரச்சினை ஏற்பட்டது. அப்போது ரிஷாத் பதியூதினுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரனையை முதலில் விசாரணைக்கு எடுக்கலாம் என ஜே.வி.பி கூறியது. எனினும் பிரச்சினை அத்துடன்

முடிவுக்கு வரவில்லை. ஆளுங்கட்சிக்குள் சில நெருக்கடி நிலைமைகள் தோன்ற ஆரம்பித்தன. இதனையடுத்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவுக்குழு ஒன்றை நியமித்தார். அதாவது இவ்வாறான ஒரு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு இந்த சம்பவத்துக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை ஆராய வேண்டும் என்று ஆரம்பத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் கோரிக்கை விடுத்திருந்தன. இந்த சூழலில் நம்பிக்கையில்லா பிரேரனை குறித்தும் இந்த தெரிவுக்குழு ஆராய வேண்டும் என்றும் தெரிவித்து தெரிவுக்குழு முயற்சியில் பிரதமர் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக ரிசாத் பதியுதீன் தொடர்பாகவும் தெரிவுக்குழு விசாரித்து அறிக்கை சமர்ப்பித்த பின்னர் நம்பிக்கையில்லா பிரேரனையை விவாதத்துக்கு எடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியும் ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கட்சியும் இந்த கட்டத்தில் தெரிவுக்குழுவை கடுமையாக எதிர்த்தன. இருப்பினும் பாராளுமன்ற தெரிவுக்குழு பிரதி சபாநாயகர் ஆனந்தகுமாரசுவாமி தலைமையில் நியமிக்கப்பட்டதுடன் தெரிவுக்குழுவில் கட்டாய விடுமுறையில் இருக்கின்ற பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோர் சாட்சியமளித்த போது ஜனாதிபதி அசௌகரியத்துக்கு உட்படும் வகையில் சில விடயங்களை முன்வைத்திருந்ததாக உணரப்பட்டது. இதனையடுத்து சுதந்திர கட்சி, தெரிவுக்குழுவை கடுமையாக எதிர்த்ததுடன் பாதுகாப்பு சார் பிரதிநிதிகள் சாட்சியம் வழங்கும்போது அதனை ஊடகங்கள் அறிக்கையிடுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் தெரிவித்து வந்தது (கிருபன், 2019).

இந்த நிலையிலேயே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே முரண்பாடுகள் வலுவடைய ஆரம்பித்ததோடு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்குமிடையிலும் முரண்பாடுகள் ஏற்படவும் ஆரம்பித்தன. ஜனாதிபதி உடனடியாக தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரியிருந்தார். நிறுத்தாவிடின் தான் அமைச்சரவை கூட்டங்களில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார். இந்நிலையில் அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்த சபாநாயகர் தெரிவுக்குழுவை நிறுத்த முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்தார். இதன் பின்னணியில் நிறைவேற்று அதிகாரத்துக்கும் பாராளுமன்றத்துக்குமிடையிலான முரண்பாடுகள் வலுவடைய ஆரம்பித்தன. வாராந்த அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் ஆனால் முறுகல் நிலை ஏற்பட்ட காலப்பகுதியில் அமைச்சரவை கூட்டம் நடைபெறாமை நாட்டின் நிர்வாக நடவடிக்கையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. 60 திட்டங்களுக்கான அங்கீகாரம் பெறப்படவிருந்தன. அவை அனைத்தும் நிலுவையில் விடப்பட்டன. இவ்வாறாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான முரண்பாடுகள் ஏற்பட்டமையானது நாட்டின் நிர்வாக விடயங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. இவ்வாறானதொரு போக்கே உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்கு பின்னரான சூழலில் அரசியல் ரீதியாக ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (வீரகேசரி, 2019).

மேலும் தேசிய பாதுகாப்பையும், பிராந்திய பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற காரணத்தைக்காட்டி, உலக வல்லரசுகள் இலங்கையில் கால் பதிப்பதற்கு இந்த தற்கொலை

குண்டுத்தாக்குதல்கள் உரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. தென்னாசியப் பிராந்தியத்தில் இராணுவ பொருளாதார வல்லமையை வளப்படுத்திக் கொள்வதற்கான போட்டியில் சீனாவும் அமெரிக்காவும் களத்தில் இறங்கின. அந்த போட்டிச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவும் புதிய நகர்வாகவும் அந்த இரண்டு நாடுகளுமே பாதுகாப்பு தளத்தை, ஒரு பாதுகாப்பு நிலையம் நிறுவுவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்து அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் இடம்பெற்றதாக ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன. ஏட்டிக்கு போட்டியாக செயற்படுகின்ற வல்லரசுகளான அமெரிக்காவும், சீனாவும் இந்த சின்ன சிறிய தீவில் நிலைகொள்வதன் மூலம் இரு தரப்புக்குமிடையிலான கருத்து முரண்பாட்டு நிலைமைகள், முரண்பாடான செயற்பாடுகள் என்பன இங்கு இடம்பெறும். இதன் ஊடாக பிராந்தியத்தில் பதற்றநிலையை உருவாக்க வல்ல உணர்வு நிலையின் உற்பத்தி தளமாக இலங்கை மாறுவதற்கான சாத்தியங்கள் உண்டு. இது நீண்ட கால அடிப்படையில் இலங்கை மக்களின் நிம்மதியையும் வளர்ச்சி போக்கிலான அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையையும் அச்சுறுத்தலாக்க வல்லது. மொத்தத்தில் உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் பிராந்திய வல்லாதிக்க போட்டிக்குள் வலிந்து இழுத்துச் சென்றிருப்பதையே காணமுடிகின்றது. ஜனநாயக நாடாகிய இலங்கைக்கு இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள் (மாணிக்கவாசகம், 2019).

**பொருளாதார ரீதியான விளைவுகள்**

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் இலங்கையின் பொருளாதாரத்தை பாரிய பின்னடைவுக்குள் கொண்டு வந்துள்ளது எனலாம். நாட்டு மக்களும் பொருளாதார ரீதியிலும் வாழ்வாதார ரீதியிலும் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்நிலை இலங்கைக்கு குறுகிய கால பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்துவதை போன்று நீண்ட காலத்திற்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனலாம்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை அடுத்து இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கணிசமான அளவு குறைவடைவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னர் பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு படையெடுக்க ஆரம்பித்து சேவைத்துறை, கைத்தொழில் துறை என பல துறைகளில் தமது முதலீடுகளை மேற்கொண்டனர். இதனால் இலங்கைக்கு கணிசமான அளவு அந்நியச்செலாவணி கிடைத்து அந்நிய செலாவணி கையிருப்பு வீதமும் அதிகரிக்க ஆரம்பித்தது. அதே போல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நேரடி முதலீடுகள் மூலம் இலங்கையில் பல தொழில் வாய்ப்புகள் புதிதாக உருவாகி வேலையற்றிருந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கப்பெற்று நாட்டின் வேலையில்லாப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப்பெற்றது. மேலும் இந்த முதலீடுகளினால் உருவான கைத்தொழில் மற்றும் சேவைத்துறையினால் உள்நாட்டு உற்பத்திக்கு கணிசமாக பங்களிப்பு கிடைக்கப்பெற்றது. நாட்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் அசாதாரண சூழ்நிலை காரணமாக புதிய முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதற்கு எந்த அளவு முனைப்புக் காட்டுவார்கள்

என்பது கேள்விக்குறியாக காணப்பட்டதென்பதும் இலங்கையில் முதலீடு செய்தவர்கள் இலங்கையில் தமது முதலீடுகளைத் தொடர்வது தொடர்பில் இருமுறை சிந்திக்க ஆரம்பித்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் சுற்றுலா என்பது நாட்டின் மூன்றாவது பெரிய அந்நியச் செலாவணி வருவாயாக காணப்படுவதுடன் இது ஹொட்டல் துறையில் 135,000-150,000 வரையான வருமானத்தையும் ஈட்டித் தருகிறது. இத் துறையின் கீழ் 2019ம் ஆண்டு 3 பில்லியன் சுற்றுலா பயணிகளின் வருகையையும் 5 பில்லியன் டாலர் வருமானத்தையும் எதிர்பார்க்கப்பட்டது. 2018ம் ஆண்டு சுற்றுலா வருவாய் 11.6% அதிகரித்திருந்தது. இவ் வளர்சியானது வருடார்ந்த சுற்றுலா பயணிகளின் அதிகரிப்பால் ஊக்குவிக்கப்பட்டது. 2018ம் ஆண்டின் 10.3% மான அதிகரிப்பானது 2.3 பில்லியன் வருமானத்தை அடைந்ததாக பதிவு செய்துள்ளது.

இதற்கான காரணிகளாக

- புகழ் பெற்ற சர்வதேச சுற்றுலா அமைப்புகளின ஒப்புதல்கள் மற்றும் பாராட்டுக்கள்
- ஆக்கிரமிப்பு ஊக்குவிப்பு பிரச்சாரங்கள்
- சுற்றுலாத் துறை முதலீடு அதிகரிப்பு
- விமான மற்றும் கடல் வழியான சிறந்த இணைப்புக்கள்

போன்றன இலங்கை சுற்றுலாத் துறையின் வளர்சிக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கின. அவ்வாறே சுற்றுலாத்துறை அடுத்து வரும் காலங்களிலும் வளர்சியடையத் தயாராகக் காணப்பட்டது. எனினும் ஈஸ்டர் தாக்குதலில் இடம் பெற்ற சுற்றுலாப் பயணிகள் மீதான தாக்குதலால் இலங்கையில் ஹோட்டல் அசோசியேடின் இந்த ஆண்டுகளான சுற்றுலா வருவாயில் 1.5 பில்லியன் டாலர் இழப்பை மதிப்பிட்டுள்ளது. கொழும்பில் உள்ள 03 சுற்றுலா ஹோட்டல்களில் நடந்த குண்டு வெடிப்பில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டனர். இவை இலங்கைக்கு செல்வந்த பயணிகள் வரும் ஆடம்பர ஹோட்டல்களாகும். 03 ஹோட்டல்களில் மட்டுமே குண்டுகள் வீசப்பட்டாலும் ஒட்டு மொத்த சுற்றுலாத் துறையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஈஸ்டர் தாக்குதலானது சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு குறித்த விடயத்தில் விமர்சனத்தை ஏற்படத்தியுள்ளது.

Central bank of srilanka ஜீன் தொடக்கத்தில் ஈஸ்டர் Sunday தாக்குதலால் ஏற்பட்ட பொருளாதார அழிவுகள் குறித்த இரகசிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் “இலங்கை அரசு வரிமூலம் இழந்துள்ளது. அதாவது vat வரி மூலம் இலங்கைக்கு ஆண்டுக்கு கிடைக்கப் பெறும் 26 பில்லியன் வருமானமானது இழப்பீட்டுக்குள்ளாகியது” என்கின்றது (www.dailymirror.lk).

பங்குச்சந்தை முதலீட்டை எடுத்து நோக்கும் போது ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையை (பாதுகாப்பு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை) அடிப்படையாக கொண்டே வெளிநாட்டவர்கள் முதலீடு செய்வதற்கு முன்வருவர். இதன்படி எமது நாட்டில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் பங்குச்சந்தையிலிருந்து அதிகளவான வெளிநாட்டு முதலீடுகள்

வெளியேறியமையை அவதானிக்க முடிந்தது. அவ்வாறானதொரு நிலையைத்தான் தாக்குதல்களுக்கு பின்னரான பங்குச்சந்தையும் எதிர்நோக்கி வருகின்றது. இதனால் பங்குச்சந்தையில் முதலீடுகள் குறைவடைந்து பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தேவையான முதலீடுகள் கிடைக்காமல் போகும் அபாயம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதேபோன்றே அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக விநியோகிக்கப்படும் திறைசேறி முறிகள் மற்றும் திறைசேறி உண்டியல்கள் மீது வெளிநாட்டு முதலீடு குறைவடைந்து நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துவதுமாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலினுடைய தாக்கமானது காணப்பட்டது (வினோத், 2019).

**சமூக விளைவுகள்**

ஈஸ்டர் தாக்குதலின் விளைவான சமூக விளைவுகளை பின்வருமாறு நோக்க முடியும். தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் முஸ்லிம் பெயர் தாங்கிய தீவிரவாதப் போக்குடையவர்கள் என்ற காரணத்தினால் இதுவரை காலமும் முஸ்லிம்களுடன் நல்லுறவு கொண்டிருந்த ஏனைய சமூகத்தவர்கள் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களாகக் கருதி, அவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. இது பல்லின சமூக கட்டமைப்பைக் கொண்ட நாட்டில் முஸ்லிம்கள் ஏனைய சமூகத்தவருடன் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்தோடும் வாழும் நிலையை பாதித்துள்ளது. குறிப்பாக பாடசாலைகள், வைத்தியசாலைகள், வியாபார நிலையங்கள் போன்ற பொது இடங்களில் இவ்வாறானதொரு நிலை உருவாகியுள்ளதை அவதானிக்கலாம். அத்துடன் முஸ்லிம்களின் கலாசார ஆடைகள் தொடர்பிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. புர்கா, நிகாப் போன்ற ஆடைகள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் அவற்றை அணிபவர்கள் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற நிலையும் காணப்பட்டது. தாக்குதல்களின் பின்னர் புர்கா அணிந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தப்பட்ட தப்பபிப்பிராயம் காரணமாக பல்வேறு போலி குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்படும் போக்கும் அதிகரித்துள்ளது. அதன்படி ‘‘சுக்கான்‘‘ படம்பொறித்த ஆடை அணிந்திருந்த 47 வயதுடைய அப்துல் ரகீம் மசாகினா என்பவர் தர்ம சக்கரத்தை அணிந்து பௌத்த மதத்தை அவமதித்ததாகக் கூறி கைது செய்யப்பட்டு, 17 நாட்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்தார். இவர் குறித்த காலப்பகுதிகளில் காவலாளிகளால் ‘‘பயங்கரவாதி‘‘ என சித்திரிக்கப்பட்டிருந்தார் (Fuller & Rizvie, 2019).

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை தொடர்ந்து ஏற்பட்ட தாக்கங்களுள் முஸ்லிம்களின் கலாசார உரிமை மீறலும் ஒன்றாகும். குறிப்பாக முஸ்லிம் பெண்களின் ஆடை விடயத்தில் பல்வேறு சர்ச்சைகள் தோற்றம் பெற்றன. முஸ்லிம் பெண்களின் மூடும் ஆடை பற்றி வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டமையானது தாக்குதல்களின் பிரதான தாக்கமாக ஆய்வினூடாக கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் முகத்தை முழுமையாக மறைக்கும் விதத்தில் அமைந்த புர்கா போன்ற ஆடைகளை உடனடியாக தடை செய்யுமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற கண்காணிப்பு குழு பரிந்துரை செய்தது. இலங்கை

முஸ்லிம்கள் மத்தியில் இவ்வாறான ஆடைக்கலாசாரம் இதற்கு முன்னைய காலங்களில் இருந்ததில்லை என்றும் அரபுலகில் இருந்து தருவிக்கப்பட்ட இந்த கலாசாரம் பல்லின நாடொன்றுக்கு தேவையில்லை என்றும் தேசப்பற்றாளர்கள் என்று காட்டிக்கொள்வோர் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். மேலும் ஈஸ்டர் தின தாக்குதல்களினால் நேரடியாக பாதிப்படைந்த கிறிஸ்தவ சமூகத்தினர் அமைதி காத்த நிலையில் சிங்கள-பௌத்த தீவிரவாத குழுவினர் இத்தாக்குதல்களை காரணங்காட்டி குறுகிய காலப்பகுதியிலேயே முஸ்லிம் சமுகத்தினர் மீது மட்டற்ற வன்முறைச் செயற்பாடுகளை கட்டவிழ்த்து விட்டனர். குறிப்பாக வடமேல் மாகாணத்திற்குட்பட்ட பல்வேறு முஸ்லிம் கிராமங்களிலும், கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொட பிரதேசத்திலும் கடும்போக்காளர்களின் வன்முறைகள் அதிகளவில் இடம்பெற்றன. இவை முஸ்லிம்களின் பள்ளிவாயல்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டிருந்தன. சோதனை என்ற பெயரில் முஸ்லிம் பகுதிகளுக்குள் நுழைந்து அத்துமீறல் செயற்பாடுகளை மேற்கொண்டு வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர் எனவும் வர்த்தகத்தில் சிறந்து விளங்கும் முஸ்லிம்களை பாதிப்படையச் செய்யும் வகையில் இத்தகைய வன்முறைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன்மூலம் முஸ்லிம்கள் உளவியல் ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இரஜாங்க அமைச்சர் Patali Champika Ranawaka அவர்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் முன்வைக்கும் பயங்கரவாத அச்சுற்றுதலை கட்டுப்படுத்த 10 விடயங்கள் உள்ளடக்கிய செயல் திட்டத்தை முன்வைத்தார்.

I. பயங்கரவாத தடுப்புச்சட்டம் நடைமுறையில் இருக்கும் போது தவ்ஹித் ஜமாஅத் மற்றும் தாக்குதலுடன் தொடர்புடைய ஏனைய துணை நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

II. முஸ்லிம் பெண்கள் அணியும் நிகாப் மற்றும் புர்கா பாதுகாப்பு கருதி தடை செய்யப்பட வேண்டும்.

III. அரபு மொழியை மத்ரஸாக்களில் கற்பிப்பதற்கு வெளிநாட்டிலிருந்து ஆசிரியர்கள் வந்தால் அவர்கள் உடனடியாக நாடு கடத்தப்பட வேண்டம்.

IV. வெளிநாட்டு நிதியை பெறும் இஸ்லாமிய அமைப்புக்களை கண்காணிக்க வேண்டும்.

V. மட்டக்களப்பு பல்கலைக்கழகம், காத்தான்குடி ஷரீஆ பல்கலைக்கழகம், பேருவல இஸ்லாமிய கற்கை அமைப்பு, போன்றன பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

VI. செல்லுபடியற்ற ஏனைய வினை கொண்டுள்ள பாகிஸ்தான் பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, ஆப்கானிஸ்தான் போன்ற நாட்டவர்களை உடனடியாக நாடு திரும்ப வேண்டும்.

VII. மசூதிகளிள் கற்பித்தல் செயல்முறை மற்றும் அது தொடர்பான விடயங்களை விசாரிக்க பாதுகாப்பு படையினரை அனுமதிக்க வேண்டும்.

VIII. இஸ்லாமிய அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் உள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்கு விசா நாடுபவர்களுக்கு சிறப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

IX. அனைத்து அரசு புலனாய்வு அமைப்புகளும் பலப்படுத்தப்பட்டு ஒரு மையத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

X. தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் பணிகளில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் எதிர்கட்சி தலைவர்கள் நேரடியாக ஈடுபட வேண்டும் (www. Dailymirror. lk).

தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான 19 வயதுக்குட்பட்ட கிரிக்கட் தொடரை இலங்கை அணி நிறுத்தி வைத்தது. இதன் முதல் ஆட்டம் மே. 03ம் திகதி இடம் பெறவிருந்தது. எனினும் இவ் விளையாட்டு பாகிஸ்தானில் இடம் பெற முடிவெடுத்து இலங்கை அணியினர் பாகிஸ்தான் சென்ற போது அவர்கள் அரச வரவேற்புடன் பாதுகாப்புடனும் வரவேற்கப்பட்டமை வரலாற்றில் முதல் முறையாக இடம் பெற்ற ஓர் நிகழ்வாகும். மேலும் இத்தாக்குதலைத் தொடர்ந்து ஆயிரத்திற்கு மேற்பட்டோர் ஒரு கிழமைக்குள் பயங்கரவாதக் காப்புறுதியை பெற்றுக் கொண்டனர். இஸ்லாமிய தீவிரவாதம் என விமர்சிக்கப்பட்டு வருகின்ற Peace Tv Zakir Naik என்பவரால் இயக்கப்பட்டு வருகின்றது. இத்தாக்குதலின் பின்னர் இப் Peace Tv தடை செய்யப்பட்டமை இஸ்லாமியர்களை ஒரு சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

**முடிவுரை**

இலங்கையின் பயங்கரவாதத் தாக்குதல்களுல் ஒன்றாக ஈஸ்டர் தினத் தாக்குதல் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் யுத்தத்திற்கு பிந்திய இலங்கையின் முக்கிய போக்குகளில் ஒன்றாக இஸ்லாமோபோபியா அடையாளப்படுத்தப்படுகின்றது. இப் பயங்கரவாதத் தாக்குதலின் விளைவானது அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன் இந் நிலைப்பாடு இலங்கையின் அரசிலை உலக நாடுகளின் மத்தியில் பின்தள்ளல் நிலைக்கும் கொண்டு வந்துள்ளது. மேலும் முஸ்லிம் சமூகமானது உள்நாட்டு ரீதியிலும் சர்வரீதியிலும் பயங்கரவாதிகள் எனும் வகையில் சித்தரிக்கப்படுவதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே முஸ்லிம் சமூகங்களுடனான உறவினை ஏனைய சமூகங்கள் புறமொதுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளதுடன் முஸ்லிம்களின் கலாச்சார அலுவல்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் பாரிய தாக்கமும் ஏற்பட்டுள்ளது எனலாம். எனவேதான் குறித்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட இப் பயங்கரவாதத் தாக்குதலால் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் பாதிக்கப்படாத வகையில் அரசு நடுநிலைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகின்து. இப் பிண்ணனியே நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க அடிப்படையாக அமையும்.

**உசாத்துணைகள்**

Amarasingam, A. (2019). *Terrorism on the teardrop island: Understanding the Easter 2019 Attacks in Sri Lanka.* Retrieved From https://www.academia.edu/39302854/terrorism-on-the-teardrop-island-under-standing-the-easter-2019-attacks-in-srilanka

BBC. (2019). *Sri Lanka attacks: What we know about the Easter Bombings*. Retrieved from https://www.bbc.com/news/world-asia-48010697

BBC. (2014). *Sri Lanka Muslims killed in Aluthgama clashes with Buddhists.* Retrieved from https://www.bbc.com/news/world-asia-27864716

Department of census and statistics population by religion according to districts. (2012). Retrieved from http://www.statistics.gov.lk/PopHouSat/CP/2011/index.php?filename=pop4&gp=Activities&

De Votta, N. (2007). *Sinhalese buiddhist nationalist ideology: implications for politics and conflict resolution in Sri Lanka.* East- West centre: Washigdon.

Fuller, L., & Rizwie, R. (2019). *Muslims "targeted with arbitrary arrests" after Easter massacre*. Retrieved from https://www.aljazeera.com/indepth/features/muslims-targeted-arbitrary-arrests-easter-massacre-190613123018003.html

The Times of India. (2019). *Injured female US official in Sri Lanka Easter Bombing dies*. Retrieved from https://timesofindia.indiatimes.com/world/south-asia/injured-female-us-official-in-sri-lanka-easterbombing-dies/articleshow/69240296.cms

கிருபன். (2019). பூதாகரமாக வெடிக்கும் முரண்பாடு. Retrieved from: https://yarl.com/foum3/topic/228550.


ISBN 978-624-5736-14-0